"1994 ஆம் ஆண்டு மாகாணச் சிறுவழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1994) நிறைவேற்றப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது

(vi) தமிழ்நாடு இளங்குற்றவாளிச் சீர்திருத்தப் பள்ளிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1994@

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளங்குற்றவாளிச் சீர்திருத்தப் பள்ளிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1994). மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளங்குற்றவாளிச் சீர்திருத்தப்பள்ளிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1994) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்." எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

@2-5-1994 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[பேரவைத் துணைத் தலைவர்] [1994 மே 4

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது,

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது

மாண்புமிகு சட்ட அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளங்குற்றவாளிச் சீர்திருத்தப் பள்ளிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/1994) நிறை வேற்றப்பெற வேண்டும்.''
எனக் கோருகிறேன்.
முற்பகல் 11-55

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஈ) தமிழ்நாடு நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1994). மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1994) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்." எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்கிற நேரத்தில் நகர்புற நில உச்சவரம்பு, விவசாய நில உச்ச வரம்பு சட்ட திருத்தமானது பல்வேறு நிலைகளில் பல்வேறு திருத்தங்கள் செய்தும் கூட நமக்குத் தேவையான நிலம் கிடைக்காத ஒரு நிலை இருப்பதை இந்த அரசு நன்கு அறியும். சட்டத் திருத்தம் என்ற பெயரில் 1991 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டம் திருத்தி அனுப்பப்பட்டு இது வரையில் அந்தச் சட்டம் நிறைவேற்றப்படாத காரணத்தால் நிலஉச்ச வரம்பு மூலம் நிலம் நமக்கு கிடைக்கவில்லை. அதற்குத் தகுந்த முறையில் நல்ல சட்ட நிபுணர்களை ஆலோசித்து நிலத்தை கையகப்படுத்துகிற வகையில் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல் நகர்ப்புற நில உச்ச வரம்பு பொறுத்தவரையில் சென்னையின் புறநகர்ப் பகுதிளில் இருக்கிற நிலங்கள் எல்லாம் நகர்ப்புற நில உச்சவாரம்புச் சட்டத்தின்கிழ் வந்தாலும் கூட நகர்ப்புற நில உச்ச வரம்பில் இன்றைக்கு பல்வேறு விதிவிலக்குகளைக் கொடுத்தாலும் அவற்றின் மூலம் நகர்ப்புறத்தில் இருக்கிற

@25.4.1994..ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.